**தலைப்பு 225 – பொலிஸ் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன பொலிஸ் திணைக்களத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 225 - பொலிஸ் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஒக்தோபர் 19 ஆந் திகதி பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள்,

காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பொலிஸ் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.14 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| **நிதிப்பிரமாணம் 128 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதகைமை** | | | **கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை** | **அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு** |
|---|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் | | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1. | பெறுகை நடவடிக்கைகள் போதியளவில் திட்டமிடப்படாமை. | 2.2.1(அ) |
| | | 2. | உள்ளக கணக்காய்விலான குறைபாடுகள் | 2.12 |
| | | 3. | எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டத்தினை பெற்றுக்கொள்ளாமை. | 2.1.1 (ஆ) |
| | | 4. | எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலன்களை பெற்றுக்கொள்ளாமை. | 2.1.1 (அ), (இ) (V,VI) |
| | | 5. | பணம் விடுவிக்கப்பட்ட போதிலும் செயன்முன்னேற்றத்தை பெற்றிராத செயற்திட்டங்கள் | 2.1.1(இ)(IV) |
| | | 6. | பெறுகை நடைமுறையை அமுல்படுத்துவதிலான குறைபாடுகள் | 2.2.1(ஆ) |

| | | | | |
|---|---|---|---|---|
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக உறுதிப்படுத்துவதற்கும் அவற்றை முறையாகவும் முழுமையாகவும் உடனடியாக சேகரிப்பதற்கும் கிடைக்கப்பெறும் பணத்தை கணக்கு வைப்பதற்கும் அரசிற்காக பொறுப்புக்களில் கடப்பாடுகளுக்காக அதிகாரமளிப்பதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குதல் கண்காணிப்பு மற்றும் பரீட்சிப்பதற்கும் அந்த அரசின் நிதியிலிருந்து அற்காக உடனடியாகவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற்கும் அதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றதெனவும் | 1. | முகாமைத்துவத்திலான குறைபாடுகள் | 2.6(அ),(ஆ) |
| | | 2. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு உரிய முறையில் பேணப்பட்டிராமை. | 2.13 |
| | | 3. | மனிதவள முகாமைத்துவத்திலான குறைபாடுகள் | 2.14.1(அ),(ஆ),(இ),(ஈ) |
| 128(1)(இ) | நிதிப் பிரமாணம் மற்றும் அரசின் ஏனைய குறைநிரப்பு அறிவுறுத்தல்களையும் தனது திணைக்களம் பின்பற்றப்படுவதாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்தெனவும். | 1. | இணக்கமின்மைகள் | 2.11.1 (அ),(ஆ),(இ),(ஈ)<br>2.9(அ),(ஆ),(இ)<br>2.10 (I),(II) |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக | 1. | வருடாந்த பொருள் மெய்மையாய்வில் குறைபாடுகள் | 2.3(ஆ) |

| | | | |
|---|---|---|---|
| | வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வுசெய்யும் போது அவ்வாறு தீர்வுசெய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க உள்ளன எனவும் | 2. சொத்துக்கள் முகாமைத்துவத்தின் குறைபாடுகள் | 2.3(அ),(இ),(ஈ),(உ) |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது திறைசேரியால் கேட்கப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள் சரியான காலநேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதாகவும் | வருடாந்த செயலாற்றல் அறிக்கை தாமதித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை. | 2.1.3 |
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவிடுவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ள தெனவும் அத்தகைய வேலைகள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணத்தை அறவிடுவதனை துரிதப்படுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக கீழ்மட்டத்தினரிடமிருந்து மூன்று மாதத்திற்கு ஒருமுறை அல்லது ஏனைய வகையில் ஒழுங்கு படுத்தப்பட்டதன் பிரகாரம் தமக்கு அறிக்கையிடப்படுகின்றதெனவும் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் நிலுவையான கடன் மீதிகளை அறவிடல் | 2.8(அ),(ஆ) |
| 128(1)(ஐ) | அரசின் அலுவல்களை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுக்கமுடைமை, நேர்மை போன்ற விடயங்களுக்கு உரிய மதிப்பினை வழங்கி தமது திணைக்களத்தின் முயற்சிகள் செய்யப்படுவதெனவும் | 1. எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை பெற்றுக்கொள்ளாமை. | 2.6(இ),(ஈ) |
| | | 2. முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.4 |
| | | 3. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.5 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.1.1 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை**

மிகவும் பொருத்தமான சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை பொலிஸ் புதிய உபகரணங்களை கொண்டு கவச இயலளவினை அதிகரிக்கும் நோக்கில் 2017 ஆம் ஆண்டிற்கான 400 பாதீட்டு முன்மொழிவுகளின் கீழ் இலங்கை பொலிஸிற்கு ரூபா 5,000 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த நிதியேற்பாடு ஆண்டினுள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டத்தினை பெற்றுக்கொள்ளாமை**

பொலிஸ் தகவல் தொடர்பாடல் செயற்திட்டத்தை தாபிப்பதற்குரிய அடிப்படை பணிகளுக்காக ரூபா 150 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவற்றுள் 92.50 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் செலவினமொன்றாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. எனினும், குறித்த தொகை உரிய தரப்பினருக்கு செலுத்தப்படாது பொலிஸ்மா அதிபதிரின் வங்கிக் கணக்கில் (நடப்பாண்டு) 2018 ஒக்தோபர் மாதம் வரையிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமையால் செயலாற்றலொன்றை அண்மித்திருக்கவில்லை.

**(இ) நிறைவேற்றப்பட்டிருந்த பிரதான பணிப்பொறுப்புகள்**

(i). வாகனக் கட்டுப்பாடு மற்றும் வீதிப் பாதுகாப்பினை விபத்துக்களை தடுத்தல் இலங்கை பொலிஸின் பணியொன்றாகும். 2015, 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் இடம்பெற்ற மொத்த விபத்துக்களின் எண்ணிக்கை முறையே 36,918, 39,199 மற்றும் 37,596 ஆகும். விபரங்கள் பின்வருமாறு.

| **விபத்தின் வகை** | **திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான (எண்ணிக்கை)** | | |
|---|---|---|---|
| | **2015** | **2016** | **2017** |
| உயிரிழப்புக்கள் | 2,590 | 2,837 | 2,962 |
| பாரதூரமான காயம் | 7,719 | 8,932 | 8,666 |
| சிறு காயங்கள் | 13,095 | 14,050 | 13,102 |
| சேதங்கள் | 13,514 | 13,380 | 12,866 |
| மொத்தம் | **36,918** | **39,199** | **37,596** |
| மரணமடைந்தோர் எண்ணிக்கை | **2,816** | **3,017** | **3,147** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- மீளாய்வாண்டினுள் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை மற்றும் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 130 இனை விஞ்சிய வருடாந்தம் விபத்துக்களால் உயிரிழப்பை ஏற்படுத்திய விபத்துக்களின் எண்ணிக்கை 400 இனை விஞ்சிய பொலிஸ் நுகேகொட, கம்பஹா, குருநாகல், அனுராதபுரம் மற்றும் இரத்தினபுரி பொலிஸ் பிரிவுகளில் இனங்காணப்பட்டிருந்தது.

- சந்தேக நபர்கள் இனங்காணப்படாத 2,105 விபத்துக்களில் உயிராபத்தினை ஏற்படுத்திய 63 விபத்துக்கள் மற்றும் பாரதூரமான காயங்களை ஏற்படுத்திய 183 விபத்துக்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மற்றும் எஞ்சிய விபத்துக்கள் சிறு காயங்கள் மற்றும் சேத விபத்துக்களாகும். ஆகக்கூடிய இனங்காணப்படாத விபத்துக்களின் 418 எண்ணிக்கையானது நுகேகொட பிரிவிலேயே பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றுள் உயிரிழப்புக்கள் 08 மற்றும் பாரதூரமாக விபத்துக்கள் 11 ஆகும்.

(ii). அபாயகரமான மருந்துகளின் பாவனை மற்றும் தேக்க நிலைமை தடுத்தல் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் வருடாந்த அறிக்கைக்கமைய மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டினுள் கைது செய்யப்பட்டிருந்த போதைப்பொருட்களின் அளவானது பின்வருமாறு இருந்தது.

| நிறுவனம் | Heroin - ஹெரோயின் கி.கி | | Cannbis - கெனபீஸ் கி.கி | | Hashish - ஹசீஸ் கி.கி | | Cocaine - கொக்கேய்ன் கி.கி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2016 | 2017 | 2016 | 2017 | 2016 | 2017 | 2016 | 2017 |
| பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு | 147.7 | 23.6 | 108.3 | 206.6 | 4.7 | 1.1 | 1486.3 | 2.1 |
| பொலிஸ் நிலையம் | 48.7 | 236.8 | 3531.8 | 3876.9 | 35.6 | 3.0 | 1.6 | 218.6 |
| விசேட செயற்பாட்டு படையணி | 0.3 | 0.3 | 409.9 | 512.9 | 0.0 | - | 0.1 | _ |
| ஏனைய நிறுவனங்கள் | 10.2 | 54.2 | 124.5 | 390.6 | 0.0 | 34.0 | 82.8 | 0.0 |
| மொத்தம் | 207.0 | 315.0 | 4174.5 | 4987.1 | 40.3 | 38.2 | 1570.8 | 220.7 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டின் போது பதிவு செய்யப்பட்டிருந்த ஹெரோயின் (Heroin) தொடர்பான சம்பவங்களின் அளவானது 9,520 ஆக இருந்ததுடன், அதற்காக கைது செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 9,461 ஆக இருந்தது. அது வருடாந்தம் கிரமமாக அதிகரித்து மீளாய்வாண்டின் போது பதிவு செய்யப்பட்ட

எண்ணிக்கையானது 29,296 வரையிலும் மற்றும் கைது செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 29,288 வரையிலும் அதிகரித்திருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் போது அறிக்கையிடப்பட்டிருந்த கன்ஜா (Cannabis) தொடர்பான சம்பவங்களின் எண்ணிக்கை 20,259 ஆக இருந்ததுடன், அதற்காக கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 20,243 ஆகும். அது வருடாந்தம் கிரமமாக அதிகரித்து மீளாய்வாண்டில் பதிவு செய்யப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை 51,884 வரையிலும் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 51,788 வரையிலும் அதிகரித்திருந்தது.

(iii). நாட்டினுள் சட்டம் மற்றும் சமாதானம் பாதுகாக்கப்படும் செயன்முன்னேற்றத்தினை வெளிப்படுத்தும் பிரதானமான குறிகாட்டியாக அமைவது நாட்டினுள் பதிவு செய்யப்பட்ட குற்றங்களின் நிராகரிக்கப்பட்ட அளவு மற்றும் பதிவு செய்யப்பட்ட குற்றங்களை விசாரிக்கும் ஒப்பீட்டுப் பெறுமதியாகும். 2017 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டிற்குரிய வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த தகவல்கள் பின்வருமாறு.

| **குற்றங்களின் வகை** | **2016** | | | **2017** | | |
|---|---|---|---|---|---|---|
| | **அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கை** | **தீர்க்கப்பட்ட எண்ணிக்கை** | **தீர்க்கப்பட்ட சதவீதம்** | **அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கை** | **தீர்க்கப்பட்ட எண்ணிக்கை** | **தீர்க்கப்ப சதவீத** |
| பாரதூரமான குற்றங்கள் | 36,937 | 26,869 | 72.74 | 35,979 | 28,016 | 77.86 |
| சிறு குற்றமிழைத்த நபர்களுக்கு எதிராக | 45,579 | 30,481 | 66.88 | 42,224 | 29,303 | 69.40 |
| சிறு குற்றமிழைத்த சொத்துக்களுக்கு எதிராக | 33,349 | 15,969 | 47.88 | 32,881 | 16,664 | 50.68 |
| சிறு முறைப்பாடுகள் | 1,039,350 | 1,038,942 | 99.96 | 1,029,087 | 1,029,047 | 99.99 |
| சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் | 5,709 | 3,294 | 57.70 | 5,054 | 3,711 | 73.43 |
| பெண்களுக்கு எதிரான குற்றங்கள் | 9,042 | 4,986 | 55.14 | 8,444 | 6,100 | 72.24 |
| மதுவுடன் தொடர்புடைய குற்றங்கள் | 120,105 | 111,028 | 92.44 | 120,198 | 113,037 | 94.04 |
| தூக்கத்தை தூண்டும் பொருட்களுடன் தொடர்பான குற்றங்கள் | 88,352 | 86,330 | 97.71 | 107,944 | 104,641 | 96.94 |
| பாலியல் பலாத்தாரக் குற்றங்கள் | 1,255 | 1,217 | 96.97 | 1,055 | 1,025 | 97.16 |
| நியதிச் சட்டக் குற்றங்கள் | 46,171 | 44,177 | 95.68 | 49,013 | 46,857 | 95.60 |

மீளாய்வாண்டின் போது பாரதூரமான குற்றங்கள், சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறைகளை தீர்க்கும் சதவீதமானது 70 சதவீதத்தினை விஞ்சியிருந்தது.

(iv). தாபிக்கப்பட்டுள்ள 472 பொலிஸ் நிலையங்களை 600 பொலிஸ் நிலையங்கள் வரை அதிகரித்தல் மற்றும் 50 பொலிஸ் காவலரன்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 500 மில்லியன் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், ரூபா 8.05 மில்லியன் அளவில் செலவிடப்பட்டு 17 பொலிஸ் நிலையங்கள் மாத்திரம் தாபிக்கப்பட்டிருந்தன. வாடகை மற்றும் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடங்களில் புதிய பொலிஸ் நிலையங்களை தாபித்தமையின் அடிப்படையில் புதிய கட்டிட நிர்மாணங்கள் தேவையற்றதென சேமிப்புக்களுக்கான காரணமாக பொலிஸ் மா அதிபரின் கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது.

(v). பொலிஸ் பயிற்சி நிறுவனத்தின் அபிவிருத்திப் பணிகளை நிறைவு செய்வதற்காக ரூபா 587.31 மில்லியனான நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், ரூபா 11.18 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(vi). பொலிஸ் பயிற்சி பாடசாலைக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்காக ரூபா 199.69 மில்லியன் ஒதுக்கப்பட்டு ரூபா 95.96 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. விடுதி, கேட்போர் கூடம், அலுவலகக் கட்டிடம் மற்றும் வீதிகள் உள்ளடங்கலான 06 செயற்திட்டங்களில் பணிப்பாளர் அலுவலகக் கட்டிடத்தை விரிவுபடுத்தல்.

### 2.1.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அண்மித்தல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டின் ''நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் செயற்பட வேண்டியதுடன், இலங்கை பொலிஸ் நிலைபேறான அபிவிருத்தி பின்னிணைப்பு 3 - ஆரோக்கியமான தன்மை மற்றும் நல்வாழ்வு மற்றும் 16 - சமாதானம், நேர்மை மற்றும் வலுவான நிறுவனங்களின் கீழ் 06 இலக்குகள் இனங்காணப்பட்டிருந்தது. அடிப்படை ஆண்டாக 2016 ஆம் ஆண்டை பயன்படுத்தி குறிகாட்டிகளை வடிவமைத்தல் இடம்பெற்றவாறு இருந்த போதிலும், நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அண்மிக்கும் போது குறித்த பணிகளை மேற்பார்வை செய்வதற்கு தேவையான அடைவுகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### 2.1.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை பொலிஸினால் நிதியாண்டு நிறைவடைந்து 150 நாட்களினுள் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த அறிக்கை 2018 யூன் 25 ஆந் திகதி அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது.

## 2.2 பெறுகை நடைமுறையினூடாக வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளல்

### 2.2.1 பெறுகை நடைமுறையை அமுல்படுத்தல்

இலங்கை பொலிஸின் பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு தேவையான வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும் போது பின்வரும் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையில் ஏற்பாடுகளுடனான இனங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.1.1(இ) வழிகாட்டியின் பிரகாரம் அடிப்படையொன்றில்லாது பெறுகை நடைமுறையொன்று ஆரம்பிக்கப்பட கூடாத

போதிலும், ரூபா 116.77 மில்லியனான நிதியேற்பாடுகளுடன் தொடர்பில் வழிகாட்டியிலிருந்தான விலகல்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) இலங்கை பொலிஸுக்கு தேவையான பொலிஸ் சார்ஜன்ட் / பொலிஸ் காண்ஸ்டபிள் தலைக் கவசங்கள் 75,000 கொள்வனவு செய்வதற்காக பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் 2011 மார்ச் 15 ஆந் திகதி உள்நாட்டு பிரதிநிதிகளுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இந்த பொருட்களை விநியோகித்தலுடன் தொடர்புடையதாக பின்னர் ஏற்பட்டிருந்த சிக்கல்களின் காரணமாக வழங்குநர் மற்றும் இலங்கை பொலிஸ் ஆகியவற்றுக்கிடையே 4 வருடங்களுக்கு அண்மிய காலம் காணப்பட்டதுடன், தீர்ப்பனவு நடைமுறை 2017 சனவரி 21 ஆந் திகதி நிறைவடைந்திருந்தது. தீர்ப்பனவு சபையினால் இலங்கை பொலிஸிற்கு தலைக் கவசங்களை கொள்வனவு செய்தல் மற்றும் அதற்கான ஏனைய கட்டணங்கள் இலங்கை பொலிஸினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற தீர்ப்பனவொன்று விருதொன்று (Arbitratiom Award) வழங்கப்பட்டிருந்தது. 2017 செப்தெம்பர் 29 ஆந் திகதி கூடிய அமைச்சரவை பெறுகைகள் குழுவின் தீர்ப்பனவு தீர்ப்பினை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). தீர்ப்பனவு விருதுக்கமைய 75,000 தலைக் கவசங்கள் ரூபா 127,540,672 தொகைக்கு மீள கொள்வனவு செய்வதற்கும், ரூபா 43,401,069 தொகையான சட்டக் கட்டணங்கள் மற்றும் களஞ்சியக் கட்டணங்களாக செலுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ii). தீர்ப்பனவு கட்டணங்களாக ரூபா 1,915,814 தொகை செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(iii). மேற்படி கொள்வனவிற்குரிய சமசர விருதுகளுக்கான பெறுகை நடைமுறையில் ஏதேனும் குறைபாடொன்று இடம்பெற்றிருக்குமாயின் அது தொடர்பில் தேடியறிந்து, அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் யார் என்பதும் இது தொடர்பில் எடுக்க வேண்டிய முன்கூட்டிய நடவடிக்கைகள் யாவை என்பது தொடர்பான பரிந்துரைகளை வழங்குவதற்காக 2017 யூலை மாதம் அமைச்சின் மேலதிக செயலாளரின் பங்குபற்றலுடன் நியமிக்கப்பட்டிருந் குழுவின் அறிக்கை 2018 யூலை மாதம் வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) கொட்டஹேன மற்றும் சியம்பலாபேயில் அமைந்துள்ள பொலிஸ்மா அதிபரின் களஞ்சியத்தின் கணக்காய்வு பரிசோதனை**

(i). ரூபா 17,535,421 பெறுமதியான நீல துவாய்கள், ரயிடின் கிளவுஸ், பொலிஸ் காண்ஸ்டபிள் மற்றும் சார்ஜன்ட்களின் கறுப்பு பாதணிகள் உள்ளடங்கலான 05 இருப்பு உருப்படிகளுக்குரிய 8,873 அலகுகளின் அளவு மற்றும் ரூபா 4,673,118 பெறுமதியான காக்கி சீரூடைத்துணி 12,873.38 மீட்டர் அளவில் இருப்பானது சேதமடைந்துள்ளதாக வெளிப்படுத்தப்பட்டது.

(ii). 27 இருப்பு விடயங்களின் இருப்புப் பற்றாக்குறையொன்று நிலவியதுடன், அவற்றுள் ரூபா 27,767,602 பெறுமதியான ஆண்களுக்கான வெள்ளை பணியாளர்கள், பீக் தொப்பிகள், லெதர் போல்ட், காக்கி மேஸ்கள் மற்றும் உடலுக்கு சௌகரியமான பாதணிகள் போன்ற 08 பிரதான உருப்படிகளுக்குரிய 103,660 அலகுகளின் அளவுடைய பற்றாக்குறையொன்று நிலவுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(iii). 43 இருப்பு விடயங்களின் இருப்பு மிகையொன்று நிலவியதுடன், அவற்றுள் ரூபா 22,485,217 பெறுமதியான பெண்களுக்கான வெள்ளை பனியன்கள், பாதணிகள், வெள்ளை பீக் தொப்பிகள், லுமினஸ் சட்டைகள் போன்ற 05 பிரதான உருப்படிகளுக்குரிய 11,499 அலகுகள் மற்றும் ரூபா 21,029,340 பெறுமதியான 61,851 மீட்டர்கள் அளவான காக்கி துணிகளின் மிகையொன்று காணப்பட்டது.

(ஆ) 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கையின் 3.2.6 பந்திக்கமைய 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கைகள் 2018 யூன் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், பொலிஸ் தலைமையகத்தின் பொருள் மெய்மையாய்வு நிறைவு செய்யப்பட்டிராததுடன், சிறு பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்விற்கு 2018 ஆகஸ்ட் 24 ஆந் திகதியே முன்வைக்கப்பட்டிருந்தன.

(i). 2017 ஆம் ஆண்டிற்குரிய பௌதீக இருப்பு மெய்மையாய்வில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த இருப்பின் பெறுமதி ரூபா 12,673,126 ஆன 04 உத்தியோகத்தர்களுக்குரிய 6774 அலகுகள் மற்றும் 34,083 மீட்டர்கள் அளவான காக்கி துணிகள் ரூபா 34,083 ஆக புத்தகங்களிலிருந்து குறைக்கப்பட்டிருந்தது. மேற்படி மீதிகள் இனங்காமை தொடர்பில் உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii). நாட்டில் 17 பொலிஸ் நிலையங்களுக்குரிய துப்பாக்கிகள், துப்பாக்கி குண்டுகள், வெடி மருந்துகள் மற்றும் ஆயுதங்களின் பகுதிகளின் 59,276 அலகுகளின் இருப்பு பற்றாக்குறையொன்று 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான வருடாந்த பொருள் மெய்மையாய்வு சபையின் அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) விளைவற்ற மற்றும் குறைப் பயன்பாடுடைய சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கொழும்பு நகரில் ஆரம்பிக்கப்பட்டிருந்த 3 நிர்மாணங்களுக்குரிய கட்டிடங்களுக்காக ரூபா 411.36 மில்லியன்செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 10 வருடங்கள் முதல் 12 வருடங்கள் வரையிலான காலப்பகுதியினுள் பூர்த்தியாக்கல் இடம்பெற்றிராத காரணத்தால் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது.

(ii) 24 பொலிஸ் பிரிவுகளில் 68 ஏக்கர்கள் 01 ரூட் 03 பேர்ச் கூட்டுத்தொகையான பரப்பளவான 23 காணித்துண்டுகள் பயனுடைய செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாமையால் குறைப்பயன்பாட்டுடன் நிலவியது.

(iii) பொலிஸ் நிலையங்கள் மற்றும் 15 பொலிஸ் நிலையங்களுக்குரிய 45 கட்டிடங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது குறைப்பயன்பாட்டுடன் நிலவியது. இதற்கிடையில் 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத 30 கட்டிடங்கள் காணப்பட்டன.

**(ஈ) சுவீகரிக்கப்படாத சொத்துக்களை பயன்படுத்தல்**

24 பொலிஸ் பிரிவுகளில் அரசிற்கு சுவீகரிக்கப்படாத 411 இடங்களில் பொலிஸ் பிரிவு அலுவலகங்கள், பொலிஸ் நிலையங்கள், பொலிஸ் பிரிவுகள், பொலிஸ் காவலரண்கள், முகாம்கள், சுற்றுலா தலங்கள், பொலிஸ் கல்லூரிகள் மற்றும் பயிற்சிப் பிரிவு போன்ற பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், குறித்த காணிகள் அரசிற்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**(உ) அலுவலகத்தினை நடாத்துவதற்கான செலவினம்**

பொலிஸ் நிலையம் மற்றும் அலுவலகங்களை நடாத்திச் செல்வதற்காக நாடெங்கிலும் 34 பிரிவுகளுக்குரிய அலுவலகங்களுக்குரிய 242 இடங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டினுள் ரூபா 226,508,676 வாடகை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

லேண்ட்ரோவர் டிபெண்டர் (Land Rover Defender) ரக 49 ஜீப் வண்டிகள் மற்றும் லேண்ட் க்ரூஷர் (Toyota Land Cruiser) ரகத்திலான 12 ஜீப் வண்டிகள் 2013 ஆம் ஆண்டின் போது சனாதிபதி செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இலங்கை பொலிஸ் தமது கடமைகளுக்காக பயன்படுத்தும் லேண்ட்ரோலர் டிபெண்டர் மற்றும் ஜீப் வண்டிகள் லேண்ட் க்ரூஷர் வாகனங்களுக்காக குத்தகை தவணையாக முறையாக ரூபா 445.3 மில்லியன் மற்றும் ரூபா 74.99 மில்லியன் இலங்கை பொலிஸால் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை பொலிஸிற்காக 2017 ஏப்ரல் 21 ஆந் திகதி 04 நிரல்களைக் கொண்ட அச்சீட்டு இயந்திரமொன்று (Cannon IB470) ரூபா 14,000 படி 620 பிரின்டர்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 8,680,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த ரகத்திலான அச்சீட்டு இயந்திரங்களுக்காக பயன்படுத்தப்படும் 04 நிறங்களிலான Cartridge ஒரு தொகுதிக்காக செலவிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 15,900 ஆகும். தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் அறிக்கைக்கமைய 10,000 தாள்களை அச்சிட முடியுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இந்த Cartridge தொகுதியில் அச்சிடக்கூடிய நிந்த தாள்களின் எண்ணிக்கை 1500 ஆகும். அதற்கமைய இந்த அச்சீட்டுக் கருவியில் ஒரு தாளினை அச்சிடுவதற்கான செலவினம் ரூபா 10.60 ஆகும்.

## 2.6 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொலிஸ் சார்ஜன்ட்கள் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் உத்தியோகத்தர்களுக்காக ஒவ்வொன்றும் ரூபா 3,525.28 தொகையான டென் பாதனிகள் (Deck Shoes) 56,500 தொகையானவை மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இந்த கொள்வனவுகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கிடையே பாதணிகளை பகிர்ந்தளித்தல் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i). தெரிவுப் பரிசோதனைக்கமைய 05 தொகுதிகளின் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட 2,642 பாதணிகள் தேவையான அளவினை விட விசாலமானவை ஆகும். மேலும், 02 பிரிவுகளின் 870 உத்தியோகத்தர்களுக்காக டெக் பாதணிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii). பொலிஸ் காண்ஸ்டபிள் மற்றும் பொலிஸ் சார்ஜன்ட்களுக்கு 2014 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் டெக் பாதணிகளை கொள்வனவு செய்து பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், பெண் பொலிஸ் சார்ஜன்ட் (WPS) மற்றும் பெண் பொலிஸ் கான்ஸ்'டபிள்கள் (WPC) 8000 உத்தியோகத்தர்களுக்காக இந்த இரு சந்தர்ப்பங்களிலும் டெக் பாதணிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) 21 நீர் சுத்திகரிப்பு செயற்த்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்**

வடக்கு, வட மத்திய, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடமைகளில் ஈடுபட்டுள்ள போதிலும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு சுண்ணாம்பு கலந்த நீரினை இருந்த நேர்கின்றமையால் சிறுநீரகத்துடன் தொடர்புடைய நோய்நிலமைகளுக்கு உள்ளாகும் சாத்தியகூறுகள் நிலவுவதாக குறிப்பிட்டு, அந்த மாகாணங்களின் பொலிஸ் நிலையங்களில் நீர் சுத்திகரிப்பு செயற்திட்டங்கள் 21 இனை நிர்மாணிப்பதற்காக பொலிஸ் வெகுமதி நிதியத்திலிருந்து ரூபா 35,479,452 தொகை 2017 செப்தெம்பர் 26 ஆந் திகதி வங்கப்பட்டிருந்தது. இந்த பணப் பங்களிப்பு பிரிவின் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், 14 செயற்திட்டங்களின் நிர்மாணங்களுக்குரிய 50 சதவீதம் முற்பணமாக ரூபா 10,654,490 தொகை கடற்படைக்கு செலுத்தப்பட்டிருந்தது. 2018 யூன் மாதமளவில் 05 பொலிஸ் நிலையங்களின் செயற்திட்டங்கள் மாத்திரம் நிறைவு செய்யப்பட்டிருந்தன.

**(இ) பொலிஸ் சீருடைகளை வழங்குதல்**

2014, 2015 மற்றும் 2016 ஆகிய வருடங்களில் மேல் மாகாணத்தின் பொலிஸ் சார்ஜன்ட்கள் மற்றும் பெண் பொலிஸ் சார்ஜன்ட்கள் (PS/WPS) மற்றும் அதனிலும் கீழான உத்தியோகத்தர்களுக்கு சீருடைகளை தைப்பதற்காக ரூபா 45,548,776 பெறுமதியான சீருடைத் துணிகள் 125,134 மீட்டர்கள் அளவானது பொலிஸ் குடும்பங்களின் நலன்புரி சங்கத்திற்கு பொலிஸ் பிரிவினால் வழங்கப்பட்டிருந்தது. 2017 நவம்பர் மாதம் வரையிலும் 2014, 2015 மற்றும் 2016 ஆகிய வருடங்களுக்காக முறையே 3821, 6099 மற்றும் 4,673 உத்தியோகத்தர்களுக்காக சீருடைகள் தைக்கப்பட்டிருக்கவில்லை. அந்த உத்தியோகத்தர்கள் 14,593 பேருக்குரிய தைக்கப்படாத காக்கி துணிகளின் இருப்பின் பெறுமதியானது ரூபா 28,798,102 ஆகும்.

**(ஈ) அலுவலக கட்டிடத்தினை பழுதுபார்க்காமை**

ஸ்ரீ மத் பாரொன் ஜயதிலக மாவத்தையில் அமைந்துள்ள இலக்கம் 11 இல் அமைந்துள்ள ரூபா 700 மில்லியனுக்கும் அதிகமான பெறுமதியுடைய இரண்டு மாடிக் கட்டிடம் மற்றும் காணி 2017 யூன் மாதம் இலங்கை பொலிஸிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. திணைக்களத்தின் கட்டிடப் பற்றாக்குறைக்கான மாற்றீடாகவும் வெளிவாரி நிறுவனங்களுக்கு செலுத்தும் வாடகையை குறைக்கும் நோக்குடனும் இந்த கட்டிடம் சுவீகரிக்கப்பட்டிருந்தது. எனினும் 2018 யூன் மாதம் வரையிலும் இந்தக் கட்டிடம் பழுதுபார்க்கப்பட்டு அலுவலகத்தினை நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டில் இலங்கை பொலிஸுக்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2016** | மீண்டுவருபவை | 58,549 | 55,803 | 2,746 | 4.69 |
| | மூலதனம் | 5,056 | 3,050 | 2,006 | 39.68 |
| | **மொத்தம்** | **63,605** | **58,853** | **4,752** | **7.47** |
| **2017** | மீண்டுவருபவை | 60,657 | 60,031 | 626 | 1.03 |
| | மூலதனம் | 5,325 | 3,597 | 1,728 | 32.45 |
| | **மொத்தம்** | **65,982** | **63,628** | **2,354** | **3.57** |

**ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை**

(i). 14 செலவின விடயங்களுக்காக ரூபா 4,124.57 மில்லியனான மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால், அந்த செலவின விடயங்களுக்குரிய நிதிரேற்பாடுகளின் ரூபா 2,415.68 மில்லியன் கூட்டுத்தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டமையால், சேமிப்பானது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டின் 21 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

(ii). 05 செலவின விடயங்களுக்காக ரூபா 1,170.50 மில்லியன் கூட்டுத்தொகையான குறைநிரப்பு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த செலவின விடயங்களுக்குரிய நிதியேற்பாடுகளில் ரூபா 295.54 மில்லியன் கூட்டுத்தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டமையால், சேமிப்பானது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டில் 48 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 2.8 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

இலங்கை பொலிஸுக்குரிய 22501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |

| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
|---|---|---|---|---|---|
| 1,200 | 1,146 | 1,248 | 1,250 | 2,900 | 1,282 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) நிலுவையாக இருந்த கடன் மீதிகளை அறவீடு செய்யாமை**

(i). கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட இணக்கக்கூற்றறிற்கமைய அத்திகதியில் உள்ளபடியாக அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 103,008,182 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதியானது 01 முதல் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்பட்டவாறு இருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii). 2016 திசெம்பர் 28 ஆந் திகதிய 31/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கைக்கமைய விசேட முற்பணங்கள் அந்த ஆண்டினுள்ளே அறவிடப்பட்டு நிறைவு செய்யப்பட வேண்டும். 332 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 422,850 தொகையான விசேட முற்பணத் தொகையை அவ்வாறு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்விற்காக முன்வைக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் “பீ” கணக்கிற்கமைய திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் வலய அலுவலகங்களினால் தயாரிக்கப்பட்ட தனிப்பட்ட மீதிகளுக்கிடையே இனங்காணப்படாத ரூபா 24,899,639 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

## 2.9 பொது வைப்புக் கணக்கு

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 05 வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 438.09 மில்லியன் ஆகும். பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 வருடங்களை விஞ்சிய ரூபா 219.01 மில்லியன் கூட்டுத்தொகையான 878 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் போது சார்க் தீவிரவாத மற்றும் போதைப்பொருள் குற்றங்கள் அவதானிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக இந்தியாவிலிருந்து வழங்கப்பட்டிருந்த ரூபா 11,503,192 தொகையான பணம் உரிய பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றாது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது போதைப்பொருளுக்கு அடிமையானவர்களின் புனர்வாழ்வு மற்றும் போதைப்பொருள் பாவனையிலிருந்து மீட்கும் பணியை பலப்படுத்துவதற்காக பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 4,200,000 தொகையான முற்பணத்தில் ரூபா 1,837,052 தொகை அல்லது 44 சதவீதமான பணம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 2.10 வங்கிக் கணக்குகளை நடைமுறைப்படுத்துவதிலான குறைபாடுகள்

**சீராக்கப்பட வேண்டிய மீதிகள்**

2017 ஆம் ஆண்டின் போது நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த 48 வங்கிக் கணக்குகளுக்குரியதாக முன்வைக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக்கூற்றினை பரிசோதனை செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i). வழங்கப்பட்ட போதிலும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 130,117 கூட்டுப்பெறுமதியுடைய 13 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396(இ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii). 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் 03 வங்கிக் கணக்குகளுக்குரியதாக ரூபா 374,242 பெறுமதியான இனங்காணப்படாத பெறுவனவுகள் இனங்காணப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.11 இணக்கமின்மைகள்

### 2.11.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | பெருநகர்களுக்கான கட்டளைச் சட்டம், 252 அதிகாரம், 231 மற்றும் 230 ஏற்பாடுகள் | இலங்கை பொலிஸிற்கு சொந்தான ஆதனங்கள் தொடர்பில் கொழும்பு மாநகர சபையினால் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 116,008,146 தொகையான வீதவரி மாநகர சபைக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவு, 58, 64, 65 மற்றும் 66 ஆம் கட்டளை. | (i) மின்தூக்கி பாவனைக்கு உரிய நிபந்தனைகள் கொட்டஹேன பொலிஸ்மா அதிபர் களஞ்சியத்தின் மின்தூக்கி தொடர்பில் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.<br>(ii) கொட்டஹேன பொலிஸ் மா அதிபதி களஞ்சியத்தில் தீயிலிருந்து பாதுகாப்பதற்கு போதியளவான தீயணைப்பு வசதிகள் வழங்குவதற்கும் அவற்றை உரிய முறையில் பராமரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | தாபன விதிக்கோவையின் VIII | கடல் மட்டத்திலிருந்து 5000 அடிகளையும் விட |

| | | |
|---|---|---|
| | அத்தியாயத்தின் 12.1 ஆம் பிரிவு | உயரத்தில் அமைந்துள்ள சேவை நிலையங்களில் சேவையாற்றும் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும், சேவை நிலைப் படியாக அவரின் கூட்டிணைந்த சம்பளத்தில் 8 சதவீதம் செலுத்தப்பட வேண்டிய போதிலும், 2009 செப்தெம்பர் மாதம் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் டயகம பொலிஸ் நிலையத்தில் சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச்சென்ற 77 உத்தியோகத்தர்களுக்கு குறித்த சேவைக் காலப்பகுதிக்காக செலுத்த வேண்டிய ரூபா 2,071,905 தொகையான சேவை நிலைய படிகள் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) | நிதிப்பிரமாணம் 835(1)(அ), (ஆ) மற்றும் (இ) | காணி அல்லது கட்டிடங்களை புதிதாக கொள்வனவு செய்தல், வாடகைக்கு எடுத்தல் தொடர்பிலும் முற்பணம் போன்ற பணிகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய அமைச்சு செயலாளரின் அங்கீகாரமின்றி 34 பிரிவுகளுக்குரிய 242 நிலையங்கள் ரூபா 225,549,614 தொகையான வாடகைப் பெறுமதிக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ii) | நிதிப்பிரமாணம் 210(1) | கழிவுகளை பெறக்கூடிய அனைத்து சந்தர்ப்பங்களிலும் அந்த கழிவினைப் பெறக்கூடிய வகையில் முன்கூட்டியே கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டும். 2017 ஆம் ஆண்டிற்குரிய வீத வரி அந்த வருடத்தின் சனவரி 30 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தப்படாமையால் ரூபா 945,460 தொகையான கழிவு இழக்கப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப்பிரமாணம் 154(1) 5(அ)(i) மற்றும் (iii) | கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது தேவையான ஏனைய ஆவணங்கள் மற்றும் தகவல்களை பெற்றுக்கொள்ளும் உரித்து குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 04 சந்தர்ப்பங்களில் வீதவரி செலுத்தியமைக்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 751, 752 மற்றும் 754 | பொருள் இருப்புப் பதிவேடுகளை உரிய முறையில் கணக்கு வைத்தல் மற்றும் பொறுப்பு, பொருட் பதிவேட்டுப் புத்தகத்தில் பதிவு செய்தல் மற்றும் இருப்புப் பதிவேட்டுப் புத்தகத்தைச் சமப்படுத்தல் போன்ற பணிகள் தொடர்பில் கவனம் செலுத்தாமை. |
| (v) | நிதிப்பிரமாணம் 755 | கொட்டஹேன பிரதான களஞ்சியத்தின் |

பொறுப்பாளர் ஓய்வு பெற்று அல்லது இடமாற்றம் பெற்றுச் செல்லும் சந்தர்ப்பங்களில் உரிய முறையில் பொருள் கையளிப்பு அல்லது கையேற்பு இடம்பெற்றிருக்கவில்லை.

### 2.12 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 68 ஆன போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான வெற்றிடங்கள் 45 ஆகும். இந்த வெற்றிடங்களுக்கிடையே 09 வெற்றிடங்கள் 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறான பெருந்தொகையான வெற்றிடங்கள் நிலவுதல் பிரிவின் உயர் செயலாற்றலினை அடைந்து கொள்வதற்கான தடையொன்றாக இருந்தது.

### 2.13 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

பொலிஸ் திணைக்களத்தினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் காலாண்டுக்கு ஒன்று வீதம் 04 கூட்டத் தடவைகள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், 02 குழுக் கூட்டங்கள் மற்றும் அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களுக்கு பதிலாக நடாத்தப்பட்ட விசேட கூட்டமொன்று மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

### 2.14 மனிதவள முகாமைத்துவம்

#### 2.14.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவு

கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான, அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான வெற்றிடமான மற்றும் மிகையான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுகின்றன. மீளாய்வாண்டிற்காக இலங்கை பொலிஸினால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 44,340.53 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.

| | ஆளணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளில் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 890 | 470 | 420 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 4,301 | 2,439 | 1,862 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 88,392 | 74,964 | 13,428 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 2,141 | 3,552 | 117 | 1,528 |
| | மொத்தம் | 95,724 | 81,425 | 15,827 | 1,528 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) சீருடைப் பதவியணி**

(i). பொலிஸ் பாதுகாப்பு உதவிச் சேவைகளுக்காக 1,528 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறையொன்றை தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினூடாக அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii). 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் உதவி பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்காக ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன், 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காகவும் ஆட்சேர்ப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கவில்லை என கணக்காய்விற்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 314 ஆக இருந்ததுடன், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 91 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன.

(iii). 2015, 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்காக பதவியுயர்வினை 09 பேர் மாத்திரமே பெற்றிருந்தனர். எவ்வாறெனினும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட 169 பதவிகளில் 122 பதவிகள் அதாவது 72 சதவீதம் வெற்றிடமாகக் காணப்பட்டன.

(iv). 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் பின்வருமாறு சேவையை கைவிட்டுச் செல்லலின் கிரமமான அதிகரிப்பொன்றினை காண்பித்தது. சீருடைப் பதவியணியில் 9,002 வெற்றிடங்கள் நிலவும் போது, பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள் சேவையை கைவிட்டுச் செல்லலின் அதிகரிப்பு நாட்டின் சட்டம் மற்றும் சமாதானத்தை பாதுகாக்கும் பணிகளில் தடையொன்றாக அமைந்திருந்தது.

| **பதவி** | **வருடாந்த சேவையை விட்டுச்செல்லும் எண்ணிக்கை** | | |
|---|---|---|---|
| | **2015** | **2016** | **2017** |
| பொலிஸ் சார்ஜண்ட் | 8 | 11 | 32 |
| பொலிஸ் கான்ஸ்டபிள் | 144 | 185 | 367 |
| பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் | 14 | 10 | 32 |
| பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி | 16 | 21 | 46 |
| ஏனைய | 19 | 22 | 23 |
| மொத்தம் | **201** | **249** | **500** |

(ஆ) பொலிஸ் உதவிப் பதவியணியிலான வெற்றிடங்களின் எண்ணிக்கை 6,323 ஆக இருந்ததுடன், அ அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையில் 83 சதவீதம் ஆகும். இந்த செயற்திட்டங்களின் காரணமாக மருத்துவ பிரிவு, பொறியியல் பிரிவு மற்றும் ஏனைய தொழில்நுட்ப சேவைகள் பலவற்றின் பணிகள் செயற்திறனாக மேற்கொள்ள முடியாதிருந்தது.

(இ) சிவில் பதவியணியினுள் கூட்டிணைந்த சேவைகளுக்குரிய உத்தியோகத்தர்கள் மற்றும் கூட்டிணைந்த சேவைக்குரித்தல்லாத சேவைகளின் உத்தியோகத்தர்கள் நீண்டகாலமாக பொலிஸில் தொடர்ச்சியாக சேவையாற்றிய சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. இது அரச சேவைகள் ஆணைக்குழு செயல்வழிக் கோவை விதி 1 ஆம் தொகுதியின் XVIII ஆம் அத்தியாயத்தின் 195 ஆம் விதிக்கு முரணாக இடம்பெற்றிருந்தது.

| இலங்கை பொலிஸில் தொடர்ச்சியான சேவைக் காலம் வருடம் | கூட்டிணைந்த சேவைக்குரிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | ஏனைய சேவைகளுக்குரிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 05 - 10 இடைப்பட்ட | 570 | 08 |
| 10 - 20 இடைப்பட்ட | 496 | 08 |
| 20 - 30 இடைப்பட்ட | 220 | 03 |
| 30 இற்கு அதிகமான | 16 | 01 |
| **மொத்தம்** | **1,302** | **20** |

இந்த உத்தியோகத்தர்களின் 510 பேர் முதல் நியமனம் தொடக்கம் இலங்கை பொலிஸில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களாவர்.

**(ஈ) பதவியணியினரை பயிற்றுவித்தல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). 2017 ஆம் ஆண்டினுள் வாகனங்களை ஒழுங்குபடுத்தல் தொடர்பில் 06 உள்நாட்டு பயிற்சி பாடநெறிகள் 312 உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் இடம்பெற்றிருந்தது. நாடு முழுவதும் சுமார் 9,000 வாகன ஒழுங்குபடுத்தல் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் 820 உத்தியோகத்தர்கள் மாத்திரம் பயிற்றுவித்தல் வாகன ஒழுங்குபடுத்தல் பணிகளுக்காக ஈடுபடுத்தியுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது போதுமானதாக இருக்கவில்லை.

(ii). வாகனங்களை ஒழுங்குபடுத்தல் தொடர்பான வருடாந்த பயிற்றுவித்தல் குறைவான மட்டத்தில் காணப்படுகின்றமைக்கு வாகன தலைமையகத்தின் விரிவுரை மண்டப வசதிகள் போதுமானதாக இல்லாதிருந்தமை, பயிற்சி விரிவுரையாளர்களின் பற்றாக்குறை மற்றும் கணனி பிரிவின் இயலளவு குறைான மட்டத்தில் நிலவுகின்றமை ஆகியன காரணங்களாக அமைந்திருந்தன.